**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது 1475 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தந்த மாவட்ட சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு ரக கைத்தறி துணிகள் மற்றும் பட்டுத் துணிகளை உற்பத்தி செய்து தாய்ச்சங்கமாகிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக துணிகளை உடனுக்குடன் விற்பனை செய்து வருகிறோம். அதனால் இன்றைக்கு மிகப் பெரிய தேக்கம் கைத்தறித் துறையிலே இல்லை. இன்றைக்கு தேங்கியிருக்கின்ற துணிகள் 2 மாதத்தினுடைய உற்பத்தியினுடைய அளவே ஆகும். இதுவும் கோ-ஆப்டெக்ஸ் கொடுத்த உற்பத்தி திட்டத்திற்கு மேலாக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்திருப்பது ஆகும். ஆகவே இந்தத் துணிகளை உடனடியாக விற்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே அந்நிய நாடுகளில் நடைபெறுகின்ற பொருட்காட்சியைப் பற்றி இங்கே உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்தப் பரிசீலனையையும் இந்தத் துறை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையோடு, உத்தரவோடு செயல்படுத்துவதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளுடைய மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, 210.43 இலட்சம் மீட்டர் துணிகள் மதிப்புதான் தேங்கியிருக்கிறது. இது 8 கோடியே 317 ஆயிரத்து 30 இலட்சமாகும். இது சுமார் 2½ மாதத்தில் மட்டுமே இந்த உற்பத்தி ஆகும். ஆகவே இதை உடனடியாக கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்வதற்கும் பொருட்காட்சிகள் போட்டு விற்பதற்கும் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 457, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**457—**

**தாத்தையங்கார்பேட்டையில் சாயத் தொழிற்சாலை அமைத்தல்.**

*38165— **திரு. என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 ஏப்ரல் 26*]

(அ) தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டையில் நெசவாளர்களின் நலன் கருதி சாயத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்போது பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. என். ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு பதில் வரும் முன்பே எனது தொட்டியம் தொகுதியில் தாத்தையங்கார்பேட்டை நெசவாளர் நலன் கருதி சாய தொழிற்சாலை ஒன்றை எங்களுக்கு அளித்த எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது சார்பாகவும், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் வாழ்கின்ற நெசவாளர்கள் குடும்பங்கள் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்கி இந்தச் சாய தொழிற்சாலை வேலைகள் எப்போது முடிவடையும் எப்போது செயல்படத் துவங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ரூ. 4.27 இலட்சம் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இதனுடைய பணிகள் துவங்கப்பட்டு தரைமட்டம் வரை வந்திருக்கிறது. இன்னும் 3 மாதத்திற்குள்ளே அந்தப் பணி முடிவடைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 458, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**458—**

### ஆரணி தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

*21760—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—